

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.4.2025) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற கலைஞர் கைவினைத் திட்ட தொடக்க விழாவில், 2023–24ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட சிறந்த குறுந்தொழில் நிறுவனத்திற்கான விருதினை திருச்சிராப்பள்ளி – டிஜிட் பிசினஸ் சர்வீசஸ் நிறுவனத்திற்கும், சிறந்த மகளிர் நடுத்தரத் தொழில் நிறுவனத்திற்கான விருதினை காஞ்சிபுரம் கிரியா மெடிக்கல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், சிறந்த மகளிர் சிறு தொழில் நிறுவனத்திற்கான விருதினை திண்டுக்கல் பி.ஆர்.எஸ். டெய்ரி நிறுவனத்திற்கும் வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வப்பெருந்தகை, எஸ்.எஸ். பாலாஜி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், எம்.பாபு, இ. கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.4.2025) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற கலைஞர் கைவினைத் திட்ட தொடக்க விழாவில், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் 7.29 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள பேராவூரணி கயிறு குழுமம், இராமநாதபுரம் மாவட்டம், வசந்த நகரில் 6.72 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நகை உற்பத்தி குழுமம், தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நகரில் 1.15 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள மகளிர் எம்ராய்டரிங் குழுமம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வப்பெருந்தகை, எஸ்.எஸ். பாலாஜி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், எம். பாபு, இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர் கி.வீர ராகவ ராவ், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தலைமை சு. சண்முகம்! என்.சந்திரன் எம்.சி. - ப. குணாளன் முன்னிலை!

## காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தலைக்கவசம் வழங்கும் விழா!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகிறார்! டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

சென்னை, ஏப்.20

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சி வடக்கு மாவட்டம் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தலைக்கவசம் வழங்கும் விழா மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் கே.கே. (எ) சு. சண்முகம் தலைமையில் இன்று (20.4.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆலந்தூரில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் என். சந்திரன் எம்.சி., ப. குணாளன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் & துணை ஒருங்கிணைப் பாளர்கள் வி.ரவிச்சந்திரன், எஸ்.உதயகுமார், டி.பி.ராஜலிங்கம், ஜெ. சத்தியசீலன், ஜி.எஸ்.சீனிவாசன், வி.மணிஷ்குமார், பர்வின்நிஷா, தகவல் தொழில் நுட்ப அணி ஆலந்தூர் தொகுதி ஒருங்கிணைப் பாளர்கள் ஜெ. கிரண்புரூஸ், எஸ்.பரத்ராஜ், வே.பாலாஜி, ஆர். சந்தியா ஆகியோர் வரவேற்கின்றனர்.

விழாவில் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு நல உதவிகளை வழங்குகிறார்.

இதில் கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் அ.படப்பை மனோகரன், இ. வந்தே மாதரம், டி. பாபு, ஜி.கே. ரவி, எம்.எஸ்.கே. இப்ராஹிம், கோல்ட் டி. பிரகாஷ், அ.தமிழ்மாறன், சாய் ஜெய்காந்த் பாரதி, ஆர்.டி. பூபாலன், கீதா ஆனந்தன், ரா. பாஸ்கரன், ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், கே.ஆர் .ஆனந்தன், கலாநிதி குணாளன் மற்றும் ஆலந்தூர் தெற்கு வடக்கு பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மாணவர் அணி நிர்வாகிகள், ஆலந்தூர் தெற்கு பகுதி வட்ட நிர்வாகிகள், ஆலந்தூர் வடக்கு பகுதி வட்ட நிர்வாகிகள், உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் ஆலந்தூர் தெற்கு வடக்கு பகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் ஏ.அப்துல் லத்தீப், சா. ஜேம்ஸ், ராஜசேகர், டி.தரணிவேந்தன், எஸ்.கவிதா, ம.கலைவாணி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### தாம்பரம் மாமன்றக் குழுத் தலைவர் எஸ்.சேகர் தலைமையில்

## பெருங்களத்தூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறக்கின்றனர்!

சென்னை, ஏப்.20

காஞ்சி வடக்கு மாவட்டம், பெருங்களத்தூர் தெற்குப் பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாளை முன்னிட்டு மக்களின் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று (20.4.2025- ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி அளவில் முடிச்சூர் சாலை, பத்மாவதி திருமண மண்டபம் அருகில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு பெருங்களத்தூர் தெற்குப் பகுதி செயலாளரும், தாம்பரம் மாமன்றக் குழுத் தலைவருமான எஸ்.சேகர் தலைமை வகிக்கிறார்.

தாம்பரம் தெற்குப் பகுதி துணைச் செயலாளர் பி.புகழேந்தி எம்.சி. முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சிக்கு வ.க.ரவி, கே.சாமுண்டீஸ்வரி, ஜெ.மணிவண்ணன், எஸ். கமலா சேகர் எம்.சி., எஸ்.மதுமிதா மதன் எம்.சி., டி.ஜெபதுரை, கே.சுந்தர், எஸ்.சிவகுமார், ஜெ.குப்புசாமி, வி. யோபு, வட்டச் செயலாளர்கள் எஸ்.ஐசக், கே.வெங்கடேசன், ஆர்.சஞ்சீவி, பி.சுரேஷ், ஆர்.மஞ்சுநாதன், க.குருநாதன், டி.கே.கோட்டி, ஆர். ரேமன் எஸ்.சோமசுந்தரம், ஆர்.பரஞ்சோதி, எம்.துளசிராமன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இவ்விழாவில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய் ஆகியவற்றை வழங்குகின்றனர்.

இவ்விழாவில் 4-வது மண்டலக் குழுத் தலைவர் டி.காமராஜ் எம்.சி., காஞ்சி வடக்கு மாவட்டக் கழக இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், பி.கே.ஏ.சத்தியபிரபு, ச.ராஜேஷ், வி.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியன், ச.பிரபு, ஜே.இன்சமாம், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஏ.குமரன், டி.சுரேஷ், இரா.கதிரவன், ரா.தேவராஜ், ப.கார்த்திக் ராஜா, தா.மணிகண்டன், கே.எஸ்.யுவராஜ், ஆர். அருண்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆர்.ஓம் பிரகாஷ், எம்.ராகுல், அன்சாரி, அருண்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞர் அணியினர் சிறப்பாக செய்துள்ளனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (18–04–25) அன்று திருவள்ளூர் மாவட்ட நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் ஒரு திட்டமான திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் இலட்சுமிவிலாசபுரம் கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் ரூ 23 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் அமையும் பணிக்கு அறிவிப்பு வெளியிட காரணமாக இருந்த திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் அவர்களை சந்தித்து இலட்சுமி விலாசபுரம் கிராம மக்கள் நன்றி தெரிவித்தனர். உடன் திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் டி. தினகரன், வழக்கறிஞர் ஆர்.ராஜா, தங்கராஜ், சின்னமண்டலி மூர்த்தி, முனிகிருஷ்ணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.


